சாராம்சம்: இனிய குழந்தைகளே, நீங்கள் இப்பொழுது உண்மையான பாடசாலையில் (கற்குமிடம்) அமர்ந்திருக்கின்றீர்கள். இதுவும் உண்மையான சற்சங்கமாகும் (சத்திய சகவாசம்). இங்கே, நீங்கள் உண்மையான தந்தையின் சகவாசத்தைப் பெறுகின்றீர்கள். இதுவே உங்களை அக்கரைக்கு அழைத்துச் செல்கின்றது.

கேள்வி: கர்மக் கணக்குளைப் பொறுத்தவரை, உங்களுக்குள்ள புரிந்துணர்வுக்கும் ஏனையோருக்குள்ள புரிந்துணர்வுக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன?

பதில்: சந்தோஷமும் துன்பமும் நிறைந்த இந்த நாடகத்தில் கடவுளே சந்தோஷம்;, துன்பம் இரண்டையும் கொடுக்கின்றார் என்று மக்கள் நம்புகின்றார்கள். ஆனால் குழந்தைகளாகிய நீங்களோ இது ஒவ்வொருவரதும் கர்மக் கணக்குகளைப் பற்றிய நாடகம் என்பதை அறிவீர்கள். தந்தை என்றுமே எவருக்கும் துன்பம் விளைவிப்பதில்லை. உண்மையில், அவர் உங்களுக்குச் சந்தோஷத்திற்கான பாதையையே காட்டுகின்றார். பாபா கூறுகின்றார்: குழந்தைகளே, நான் எவரையும் என்றுமே சந்தோஷம் அற்றவர்கள் ஆக்கியதில்லை. அந்தச் சந்தோஷமின்மை உங்கள் சொந்தச் செயல்களின் பலனாகும்.

பாடல்: எங்களை இப்பாவப் பாதையில் இருந்து ஓய்வும் சௌகரியமும் நிறைந்த இடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்.

ஓம்சாந்தி. இனிமையிலும் இனிமையான, ஆன்மீகக் குழந்தைகளாகிய நீங்கள் பாடலைக் கேட்டீர்கள். அவர்கள் யாரை அழைத்தார்கள்? தந்தையையே அழைத்தார்கள். பாபா, வந்து, எங்களை இந்தக் கலியுக பாவ உலகிலிருந்து, சத்தியயுக புண்ணிய உலகிற்கு அழைத்துச் செல்லுங்கள். மனித ஆத்மாக்கள் அனைவரும் இப்பொழுது கலியுகத்தவர்கள். அவர்களின் புத்தி மேலே செல்கின்றது. தந்தை கூறுகின்றார்: நான் எவ்வாறானவர், என்ன செய்கின்றேன் என்பதை எவருமே அறிய மாட்டார்கள். ரிஷிகளும் முனிவர்களும் கூறி வருகின்றார்கள்: நாங்கள் அதிபதியாகிய, படைப்பவரான, எல்லையற்ற தந்தையையோ அல்லது அவருடைய எல்லையற்ற படைப்பின் ஆரம்பம், மத்தி, இறுதியையோ அறியாதிருக்கின்றோம். ஒளித் தத்துவமான, பிரம்ம தத்துவமே ஆத்மாக்களின் வசிப்பிடமாகும், அங்கு சூரியனோ, சந்திரனோ இல்லை, அவை அசரீரி உலகிலோ அல்லது சூட்சும உலகிலோ இருப்பதில்லை. எவ்வாறாயினும், இந்த மேடைக்கு ஒளி போன்றன இருக்க வேண்டும். ஆகையால், இந்த மேடை இரவில் சந்திரன், நட்சத்திரங்களிடம் இருந்தும், பகலில் சூரியனிடம் இருந்தும் ஒளியைப் பெறுகின்றது. இவையே ஒளிகளாகும். இந்த ஒளிகள் இருந்த பொழுதிலும், இருளே உள்ளதாகக் கூறப்படுகின்றது. இரவில், நீங்கள் மின்விளக்கைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. சத்திய, திரேதாயுகங்கள் பகல் என்றும், பக்தி மார்க்கம் இரவு என்றும் அழைக்கப்படுகின்றன. இது புரிந்து கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். பின்னர் புதிய உலகம் நிச்சயமாகப் பழையதாகும். அது பின்னர் மீண்டும்

புதியதாகி, நிச்சயமாகப் பழையது அழிக்கப்படும். இது எல்லையற்ற உலகமாகும். அரசர்கள் போன்றோரின் சில வீடுகள் மிகவும் பெரியவை. இந்த வீடு எல்லையற்றது. இதுவே மேடையாகும். இந்த மேடையைக் கர்ம ஷேத்திரம் என்றும் அழைக்க முடியும். நீங்கள் நிச்சயமாகச் செயல்களைச் செய்ய வேண்டும். இது மனிதர்கள் அனைவருக்குமான கர்ம ஷேத்திரமாகும். அனைவருமே செயல்களைச் செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் தனது பாகத்தை நடிக்க வேண்டும். ஒவ்வோர் ஆத்மாவும் முன்னதாகவே ஒரு பாகத்தைப் பெற்றுள்ளார். உங்கள் மத்தியில் இவ்விடயங்களை மிகவும் நன்றாகப் புரிந்து கொள்கின்ற சிலரும் உள்ளார்கள். உண்மையில், இது கீதைப் பாடசாலையாகும். வயதானவர்கள் எப்பொழுதாவது ஒரு பாடசாலையில் கற்பதுண்டா? இங்கே, இளையவர்கள், முதியவர்கள்-அனைவருமே கற்கின்றார்கள். இது வேதங்களுக்கான பாடசாலை என அழைக்கப்படுவதில்லை; அங்கே இலக்கோ அல்லது குறிக்கோளோ இருப்பதில்லை. அவர்கள் வேதங்களையும், சமயநூல்கள் போன்றவற்றையும் அதிகளவில் கற்கின்றார்கள். ஆனால், அவற்றைக் கற்பதனால் தாங்கள் என்னவாக ஆகுவார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது. அந்தச் சற்சங்கங்கள் எவற்றிற்கும் எவ்விதமான இலக்கோ அல்லது குறிக்கோளோ இல்லை. இப்பொழுது எவருமே அதைச் (சத்திய சகவாசம்) சற்சங்கம் என அழைப்பதற்கும் சங்கடப்படுகின்றார்கள். ஒரேயொரு தந்தை மாத்திரமே சத்தியம் ஆவார். அவரையிட்டே கூறப்படுகின்றது: நல்ல சகவாசம் உங்களை அக்கரை சேர்க்கின்றது, தீய சகவாசம் மூழ்கடிக்கின்றது. தீய சகவாசம் என்பது கலியுக மனிதரின் சகவாசமாகும். ஒரேயொருவரின் சகவாசம் மாத்திரமே சத்திய சகவாசமாகும். முழு உலகினதும் ஆரம்பம், மத்தி, இறுதியின் ஞானத்தைத் தந்தை இப்பொழுது எவ்வாறு உங்களுக்குக் கொடுக்கின்றார் என்பதையிட்டு நீங்கள் வியப்பு அடைகின்றீர்கள். நீங்கள் உண்மையான பாடசாலையில் அமர்ந்திருக்கின்றீர்கள் என அறிந்து, சந்தோஷம் அடைய வேண்டும். ஏனைய பாடசாலைகள் அனைத்தும் பொய்யானவை. எவருமே அந்தச் சற்சங்கங்கள் போன்றவற்றுக்குச் செல்வதனால், விசேடமானவர்கள் ஆகுவதில்லை. ஒரு பாடசாலைக்கு அல்லது ஒரு கல்லூரிக்குச் செல்வதனால் குறைந்தபட்சம் அவர்கள் ஏதோவொன்றாக ஆகுகின்றார்கள், ஏனெனில் அவர்கள் அங்கு கற்கின்றார்கள்; வேறெங்கும் கல்வி இருப்பதில்லை. ஒரு சற்சங்கம் கல்வி என அழைக்கப்படுவதில்லை. மக்கள் சமயநூல்களைக் கற்று, பின்னர் கடைகளைத் திறக்கின்றார்கள்; அவர்கள் அவ்விதமாகப் பணம் சம்பாதிக்கின்றார்கள். அவர்கள் கிராந்தத்தைச் சிறிதளவு கற்று, குருத்துவாரைத் (சீக்கியரின் ஆலயம், குருவிற்கான வாசல்) திறக்கின்றார்கள். பல குருத்துவாராக்கள் திறக்கப்பட்டுள்ளன. குருவிற்கான வாசலானது அவரின் வீட்டின் வாசலாகவே இருக்க வேண்டும். அவர்கள் பெரிய குருத்துவாராக்களின் வாசல்களைத் திறக்கும் பொழுது, மக்கள் அங்கே சென்று சமயநூல்களைக் கற்கின்றார்கள். முக்திதாமமும், ஜீவன்முக்தி தாமமுமே சற்குருவிற்கான வாசலான, உங்கள் குருத்துவாரா ஆகும். சற்குருவின் பெயர் என்ன? அமரத்துவ ரூபம். சற்குருவே அமரத்துவ ரூபம் என அழைக்கப்படுகின்றார். அவர் வந்து முக்திக்கும், ஜீவன்முக்திக்குமான வாசல்களைத் திறக்கின்றார். அவரே அமரத்துவ ரூபமானவர், அவருக்கு மரணம் வர முடியாது. ஓர் ஆத்மா சிறு புள்ளி. ஓர் ஆத்மா எவ்வாறு மரணத்தை அனுபவிக்க முடியும்? அந்த ஆத்மா தனது சரீரத்தை நீங்கி ஓடிவிடுகிறார். ஓர் ஆத்மா தனது பழைய சரீரத்தை நீக்கி,

புதியதொன்றை எடுக்கின்றார் என்பதை மக்கள் புரிந்து கொள்வதில்லை. ஆகவே அழுவதற்கு என்ன உள்ளது? இந்த நாடகம் அநாதியாக உருவாக்கப்பட்டுள்ளது என நீங்கள் அறிவீர்கள். அனைவருமே தங்கள் சொந்தப் பாகத்தை நடிக்க வேண்டும். சத்தியயுகத்தில் உள்ளவர்கள் பற்றை வென்றுள்ளார்கள் எனத் தந்தை விளங்கப்படுத்தி உள்ளார். பற்றை வென்ற ஓர் அரசரின் கதையும் உள்ளது. பண்டிதர்கள் சமயநூல்களை உரைக்கின்றார்கள். தாய்மார்கள் கிராந்தத்தைச் செவிமடுத்து, தங்களுக்குள் அதனைக் கூற ஆரம்பிக்கின்றனர். பலரும் அங்கே சென்று அதனைச் செவிமடுக்கின்றார்கள். அது செவிகளுக்கு இன்பம் எனப்படுகின்றது. நாடகத் திட்டத்திற்கேற்ப, மக்கள் வினவுகின்றனர்: நான் ஏன் குற்றம் சுமத்தப்பட வேண்டும்? தந்தை கூறுகின்றார்: வந்து, இத் துன்ப உலகிலிருந்து உங்களை அப்பால் அழைத்துச் செல்லுமாறு நீங்கள் என்னை அழைத்தீர்கள். நான் இப்பொழுது வந்துள்ளேன். ஆகவே, நீங்கள் நான் கூறுவதைச் செவிமடுக்க வேண்டும். தந்தை இங்கே அமர்ந்திருந்து, குழந்தைகளாகிய உங்களுக்கு விளங்கப்படுத்துகின்றார். உங்களுக்கு நல்ல வழிகாட்டல்கள் கிடைக்கும் பொழுது, நீங்கள் அதனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். நீங்கள் குற்றம் சுமத்தப்பட மாட்டீர்கள். இதுவும் நாடகத்தில் உள்ளது. இராம இராச்சியத்தையும், இராவண இராச்சியத்தையும் பற்றிய நாடகம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு நாடகத்தில், சிலர் தோற்கடிக்கப்படுகின்றார்கள். ஆனால், அவர்களைக் குற்றம் சுமத்த முடியாது; வெற்றியும் தோல்வியும் உள்ளன. இதில் யுத்தம் என்ற கேள்விக்கு இடமில்லை. நீங்கள் அந்த இராச்சியத்தைப் பெற்றிருந்தீர்கள். முன்னர் நீங்கள் இதனை அறிந்திருக்கவில்லை. யார் சேவை செய்பவர்களும், எவரது பெயர்கள் பிரபல்யமாக உள்ளன என்பதையும் நீங்கள் இப்பொழுது அறிவீர்கள். டெல்கியில் யார் இந்த ஞானத்தை விளங்கப்படுத்துவதில் மிகவும் பிரபல்யமானவர்? அவர்கள் உடனடியாகச் சகோதரர் ஜெகதீசின் பெயரையே குறிப்பிடுகின்றார்கள். அவர் உங்களுக்காக ஒரு சஞ்சிகையைப் பிரசுரிக்கின்றார். அதில் அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதில் பல்வேறு கருத்துக்கள் எழுதப்பட்டுள்ளன. சகோதரர் பிரிஜ்மோகனும் அத்தகைய கருத்துக்களை எழுதுகின்றார். இக் கருத்துக்களை எழுதுதல் உங்கள் மாமியாரின் வீட்டிற்குப் போவது போல் இல்லை! ஆகையால் அவர்கள் நிச்சயமாக இந்த ஞானக்கடலைக் கடைகின்றார்கள். அவர்கள் செய்யும் சேவை மிகவும் சிறப்பானது. பலரும் அவற்றை வாசிக்கும் பொழுது, மிகவும் சந்தோஷம் அடைகின்றார்கள். குழந்தைகள் புத்துணர்ச்சி பெறுகின்றார்கள். சிலர் கண்காட்சிகளில் அதிகப் பிரயத்தனம் செய்கின்றார்கள். ஏனையோர் தங்கள் கர்ம பந்தனங்களில் அகப்பட்டுள்ளார்கள். ஆகையால் அவர்களால் அந்தளவிற்கு இந்த ஞானத்தைப் பெற முடியாதுள்ளது. இதுவும் நாடகம் என அழைக்கப்படுகின்றது. அப்பாவிகள் துன்புறுத்தப்பட வேண்டும் என்பதும் நாடகத்தின் ஒரு பாகமாகும். ஏன் அவ்வாறானதொரு பாகம் உள்ளது என்ற கேள்வி எழுவதில்லை: அது நாடகத்தில் ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்டுள்ளது. அதனையிட்டு நீங்கள் எதனையும் செய்ய முடியாது. சிலர் வினவுகின்றார்கள்: அத்தகைய பாகம் எனக்கு உருவாக்கப்படும் வகையில், நான் என்ன குற்றம் செய்துள்ளேன்? குற்றம் என்ற கேள்விக்கு இடமில்லை. அது ஒரு பாகமே. சில அப்பாவிகள் துன்புறுத்தப்படுகின்றார்கள். அவ்வாறாயின், அவர்கள் அனைவரும் கூறுவார்கள்: ஏன் எனக்கு இப்பாகம் கொடுக்கப்பட்டுள்ளது? இல்லை! இந் நாடகம் ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டுள்ளது. சில ஆண்களும்

துன்புறுத்தப்படுகின்றார்கள். அவ்விடயங்களையிட்டு நீங்கள் மிகவும் சகிப்புத்தன்மை கொண்டிருக்க வேண்டும். உங்களுக்குப் பெருமளவு சகிப்புத்தன்மை தேவை. மாயையின் பல தடைகள் ஏற்படும். முழு உலக இராச்சியத்தையும் நீங்கள் கோருவதால், நீங்கள் சில முயற்சிகளைச் செய்ய வேண்டும். நாடகத்தில் பல குழப்பங்களும், முரண்பாடுகளும் உள்ளன. 'அப்பாவிகளைத் துன்புறுத்துதல்' பற்றி எழுதப்பட்டுள்ளது. இரத்த ஆறும் ஓடும். எங்குமே பாதுகாப்பு இருக்க மாட்டாது. இப்பொழுது உங்களால் காலை வகுப்புக்கு நிலையங்களுக்குச் செல்ல முடிகின்றது. உங்களால் வெளியே செல்ல முடியாத காலமும் வரும். நாளுக்கு நாள், காலம் மோசம் அடைகின்றது. அது மேலும் மோசம் அடையவுள்ளது. துன்ப நாட்கள் பெரும் விசையுடன் வரவுள்ளன. ஒருவர் நோயுற்று, வேதனை அடையும் பொழுது, அவர் கடவுளை நினைவுசெய்து அழைக்கின்றார். இன்னமும் சிறிது காலமே உள்ளது என்பதையும், நாங்கள் நிச்சயமாக எங்கள் அமைதி தாமத்திற்கும், பின்னர் எங்கள் சந்தோஷ தாமத்திற்கும் செல்வோம் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். உலகில் உள்ளவர்கள் இதனையேனும் அறியார்கள். குழந்தைகளாகிய நீங்கள் இப்பொழுது தந்தையை முழுமையாக அறிந்திருக்கின்றீர்கள் என்று உணர்கின்றீர்கள். கடவுள் நீள்கோள வடிவமானவர் என அவர்கள் அனைவரும் நினைக்கின்றார்கள். அவர்கள் அந்த நீள்கோள வடிவத்தை (சிவலிங்கம்) வழிபாடும் செய்கின்றார்கள். நீங்கள் சிவாலயத்திற்குச் சென்றபொழுது, சிவலிங்கம் என்றால் என்ன என்று எப்பொழுதாவது நினைத்திருக்கின்றீர்களா? அந்த உயிரற்ற ரூபம் இருக்குமாயின், அதனைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற உயிருள்ள ஒருவரும் இருக்க வேண்டும். அவை அனைத்தும் என்ன? படைப்பவரான, கடவுள் மேலே இருக்கின்றார். அந்த ரூபம் அவரது அடையாளம், அவரை வழிபடுவதற்கு அது பயன்படுகின்றது. பூஜிக்கத் தகுதியானவர்கள் வாழும்பொழுது, இவை இருக்கவில்லை. காசியில் உள்ள சிவாலயத்திற்குச் செல்லும் மக்கள், கடவுள் அசரீரியானவர் என்பதையும், தாங்கள் அவரின் குழந்தைகள் என்பதையும் அறியாதுள்ளார்கள். நாங்கள் அவரின் குழந்தைகள், ஆகவே நாங்கள் ஏன் துன்பத்தை அனுபவம் செய்ய வேண்டும்? இது சிந்திக்கப்பட வேண்டிய விடயமாகும். ஆத்மா கூறுகின்றார்: நான் கடவுளின் குழந்தை. ஆகவே நான் ஏன் சந்தோஷம் அற்றிருக்க வேண்டும்? தந்தையே சந்தோஷத்தை அருள்பவர். நீங்கள் அழைத்தீர்கள்: ஓ, கடவுளே, எங்கள் துன்பத்தை அகற்றுங்கள்! அவரால் அதனை எவ்வாறு அகற்ற முடியும்? சந்தோஷமும், துன்பமும் உங்கள் சொந்தக் கர்மத்தின் கணக்குகள். கடவுள் சந்தோஷத்திற்குப் பலனாகச் சந்தோஷத்தையும், துன்பத்தின் பலனாகத் துன்பத்தையும் கொடுக்கின்றார் என்று மக்கள் நம்புகின்றார்கள். அவர்கள் அனைத்துக்கும் அவரே காரணம் எனக் கூறுகின்றார்கள். தந்தை கூறுகின்றார்: நான் ஒருபொழுதும் துன்பம் விளைவிப்பதில்லை. நான் உங்களுக்கு அரைக்கல்பத்திற்கான சந்தோஷத்தை அருளி, வீட்டிற்குத் திரும்பிச் செல்கின்றேன். இது சந்தோஷத்தையும், துன்பத்தையும் பற்றிய நாடகம். அது சந்தோஷத்தை மாத்திரம் பற்றிய நாடகமாயின், வழிபாடு போன்றவை இருந்திருக்க மாட்டாது. கடவுளைச் சந்திப்பதற்காகவே மக்கள் வழிபாடு போன்றவற்றைச் செய்கின்றார்கள். தந்தை இங்கே அமர்ந்திருந்து உங்களுக்கு அனைத்தையும் விளங்கப்படுத்துகின்றார். அவர் கூறுகின்றார்: குழந்தைகளாகிய நீங்கள் மிகவும் பாக்கியசாலிகள்! அந்த ரிஷிகளும், முனிவர்களும் மிகவும் பிரபல்யமானவர்கள். நீங்கள் இராஜரிஷிகள். அவர்கள்

ஹத்தயோக ரிஷிகள் ஆவர். ரிஷிகள் என்றால் தூய்மையான ஒருவர் என்று அர்த்தம். நீங்கள் சுவர்க்கத்தின் அரசர்கள் ஆகுவதால், நீங்கள் நிச்சயமாகத் தூய்மையானவர்களாக வேண்டும். சத்திய, திரேதா யுகங்களில் யாருக்கு இராச்சியம் உரியதாக இருந்ததோ, அது மீண்டும் ஒருமுறை அவர்களுக்கே உரியதாகும். ஏனைய அனைவரும் பின்னர் வருவார்கள். நீங்கள் இப்பொழுது கூறுகின்றீர்கள்: நாங்கள் ஸ்ரீமத்தைப் பின்பற்றுவதனால் எங்கள் சொந்த இராச்சியத்தை ஸ்தாபிக்கின்றோம். பழைய உலகம் அழிவதற்குக் காலம் எடுக்கின்றது. சத்தியயுகம் வரவேண்டும், கலியுகம் செல்ல வேண்டும். உலகம் மிகப் பெரியது. ஒவ்வொரு நகரமும் அதிகளவு மக்களால் நிறைந்துள்ளது. செல்வந்தர்கள் உலகச் சுற்றுலா செல்;கின்றார்கள். எவ்வாறாயினும் இங்கே எவராலும் முழு உலகத்தையும் பார்க்க முடியாது. ஆம், அவர்களால் அதைச் சத்தியயுகத்தில் பார்க்க முடியும், ஏனெனில் அங்கே ஒரேயொரு இராச்சியமும், ஒரு சில அரசர்களுமே உள்ளார்கள். இங்கோ உலகம் மிகப்பெரியதாக உள்ளது. யார் முழு உலகையும் சுற்றிப் பயணம் செய்வார்? அங்கே நீங்கள் கடல்கடந்து பயணிக்கவும் தேவையில்லை. அங்கு இலங்கை, பர்மா போன்றவை உள்ளனவா? இருக்க மாட்டாது! அங்கே அந்த இடங்கள் எவையும் இருக்காது. கராச்சியும் அங்கே இருப்பதில்லை. நீங்கள் அனைவருமே இனிய ஆற்றங்கரைகளில் வசிக்கின்றீர்கள். அங்கே பல பண்ணைகள், வயல்கள் போன்றன இருக்கின்றன. உலகம் பெரியது. ஆரம்பத்தில், வெகுசில மனிதர்கள் வசிக்கின்றார்கள், பின்னர் அவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. பின்னர் அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று தங்கள் சொந்த இராச்சியங்களை ஸ்தாபிக்கின்றார்கள். அவர்கள் படிப்படியாக அனைத்தையும் கைப்பற்றி, தங்கள் சொந்த இராச்சியங்களை ஸ்தாபிக்க ஆரம்பிக்கின்றார்கள். இப்பொழுது அனைவருமே அவை அனைத்தையும் கைவிட வேண்டும். பாரதம் மாத்திரமே என்றுமே எவரது இராச்சியத்தையும் அபகரிக்கவில்லை. ஏனெனில் பாரதம் உண்மையில் அகிம்சையானது. பாரதம் மாத்திரமே முழு உலகினதும் அதிபதியாக இருந்தது. ஏனைய அனைவரும் பின்னர் வந்து, நிலத் துண்டுகளைப் பெற்றார்கள். நீங்கள் எவரையும் கைப்பற்றவில்லை. பிரித்தானியர் பல நாடுகளைக் கைப்பற்றினார்கள். தந்தை பாரத மக்களாகிய உங்களை உலக அதிபதிகள் ஆக்குகின்றார். நீங்கள் எங்கு சென்றும் குடியமரவில்லை. இவ் விடயங்கள் அனைத்தும் குழந்தைகளாகிய உங்கள் புத்திகளில் உள்ளது. வயோதிபத் தாய்மார்களால் இவ் விடயங்கள் எதனையும் புரிந்துகொள்ள முடியாது. தந்தை கூறுகின்றார்: நீங்கள் எதனையும் கற்காதது நல்லதாகும். நீங்கள் கற்றுள்ள அனைத்தையும் உங்கள் புத்தியிலிருந்து அகற்ற வேண்டும். நீங்கள் ஒரேயொரு விடயத்தை கிரகிக்க வேண்டும்: இனிய குழந்தைகளே, தந்தையை நினைவு செய்யுங்கள்! நீங்கள் கூறுவதுண்டு: பாபா, நீங்கள் வரும்பொழுது, நாங்கள் எங்களை உங்களுக்கு அர்ப்பணிப்போம். அப்பொழுது நீங்கள் உங்களை எங்களுக்கு அர்ப்பணிக்க வேண்டும். ஒரு பரிமாற்றம் இடம்பெறுகின்றது. திருமண வைபவத்தில், மணவாட்டியும், மணவாளனும் ஒருவருக்கொருவர் உப்பைப் பரிமாறிக் கொள்கின்றார்கள். நீங்கள் தந்தையிடம் கூறுகின்றீர்கள்: என்னுடைய பழையது அனைத்தையும் நான் உங்களுக்குக் கொடுக்கின்றேன். அனைவரும் மரணிக்க வேண்டும். அனைத்தும் அழிக்கப்பட உள்ளது. நீங்கள் பின்னர் அவை அனைத்தையும் எங்களுக்குப் புதிய உலகில் கொடுப்பீர்கள். தந்தை அனைவரையும் திரும்பவும் வீட்டிற்கு அழைத்துச் செல்லவே வந்துள்ளார். அவரே மகாமரணம். சிந்தியில் அவர்கள்

வினவுவதுண்டு: அனைவரையும் அழைத்துச் செல்லும் இது என்ன வகையான மரணம்? தந்தை உங்களைத் திரும்பவும் வீட்டிற்கு அழைத்துச் செல்ல வந்திருப்பதால் குழந்தைகளாகிய நீங்கள் மிகவும் சந்தோஷமாக இருக்கின்றீர்கள். உங்கள் வீட்டிற்கு நீங்கள் பெருஞ் சந்தோஷத்துடன் திரும்பிச் செல்வீர்கள். பெருமளவு சகிக்க வேண்டியுள்ளது. மிகவும் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த தாய்மார்களும் துன்புறுத்தலை அனுபவம் செய்கின்றார்கள். நீங்கள் உண்மையான வருமானத்தை ஈட்டுகின்றீர்கள். மக்களுக்கு எதுவுமே தெரியாது. அவர்கள் கலியுகத்துச் சூத்திர சமுதாயத்தினர். நீங்களோ சங்கமயுக சமுதாயத்தினர் ஆவீர்கள். நீங்கள் அதிமேன்மையானவர் ஆகுகின்றீர்கள். இலக்ஷ்மியும் நாராயணனும் அதிமேன்மையான, முதல் இலக்கத்திற்கு உரியவர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். பின்னர் அவர்களது கலைகள் தொடர்ந்தும் குறைவடைகின்றன. அவர்கள் முதலில் மேலிருந்து கீழறங்கி வந்து, பின்னர் படிப்படியாக, தொடர்ந்தும் வீழ்கின்றனர். இந்நேரத்தில் அனைவருமே வீழ்ந்து விட்டார்கள். விருட்சம் மிகவும் பழையதாகி விட்டது. அடிமரமும் உக்கி விட்டது. ஆகவே இப்பொழுது ஸ்தாபனை இடம்பெறுகின்றது; அத்திவாரம் இடப்பட்டுள்ளது. மரக்கன்று மிகவும் சிறிதாக உள்ளது. பின்னர் அதிலிருந்து பெரியதொரு விருட்சம் வளர்கின்றது. இந்த விருட்சம் சத்தியயுகத்திலும் உள்ளது. அந்த நேரத்தில் விருட்சம் மிகவும் சிறிதாக இருக்கின்றது. இப்பொழுது அது மிகவும் பெரிதாக உள்ளது. மனித உலகில் பல்வேறு வகையான மலர்கள் உள்ளன் ஒரே விருட்சத்திலேயே பல்வேறு வகைகள் உள்ளன. இது பல்வேறு சமயங்களின் மனித விருட்சமாகும். ஒரு மனிதரின் முகம் இன்னொருவரைப் போல் இருக்க முடியாது. இரு வேறானவர்கள் ஒரே பாகத்தை நடிக்க முடியாது என்பது நாடகத்தில் ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்டுள்ளது. இது எல்லையற்ற, ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்ட, அற்புதமான நாடகம் என அழைக்கப்படுகின்றது. இதிலும் பல செயற்கையான விடயங்கள் உள்ளன. உண்மையானவை தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றன. பின்னர் அவை 5000 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் ஒருமுறை தோன்றுகின்றன. உருவாக்கப்பட்டுள்ள படங்கள் போன்றன உண்மையானவை அல்ல. (உண்மையான தோற்றம்) நீங்கள் பிரம்மாவின் முகத்தை 5000 வருடங்களின் பின்னர் மீண்டும் பார்ப்பீர்கள். இந்நாடகத்தின் இரகசியங்களைப் புரிந்து கொள்வதற்கு உங்களுக்குப் பரந்த, எல்லையற்ற புத்தி தேவை. நீங்கள் வேறு எதனையும் புரிந்து கொள்ளாது விட்டாலும், ஒரேயொரு விடயத்தை மாத்திரம் உங்கள் புத்தியில் வைத்திருங்கள்: நான் வேறு எவருக்கும் அன்றி, சிவபாபாவிற்கு மாத்திரமே உரியவர்! ஆத்மா கூறுகின்றார்: பாபா, நான் உங்களை மாத்திரமே நினைவுசெய்வேன். இது இலகுவானது. நீங்கள் தொடர்ந்தும் உங்கள் கரங்களால் செயல்கள் ஆற்றும்பொழுது, தொடர்ந்தும் உங்கள் புத்தியால் உங்கள் தந்தையை நினைவுசெய்யுங்கள். அச்சா.

இனிமையிலும் இனிமையான, அன்புக்குரிய, எப்போதோ தொலைந்து இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளுக்கு உங்கள் தாய், தந்தையாக இருக்கும் பாப்தாதாவின் அன்பும் நினைவுகளும் காலை வந்தனங்களும். ஆன்மீகத் தந்தை ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே சொல்கிறார்.

தாரணைக்கான சாராம்சம்:

1. சகிப்புத்தன்மை என்ற தெய்வீகக் குணத்தைக் கிரகித்து, மாயையின்

தடைகள் அனைத்தையும் கடந்து செல்லுங்கள். பல அனர்த்தங்கள் வந்து, பெருமளவு துன்புறுத்தல்கள் இடம்பெறும்பொழுது, நீங்கள் தந்தையின் நினைவில் நிலைத்திருந்து அனைத்தையும் சகிக்க வேண்டும். ஓர் உண்மையான வருமானத்தை ஈட்டுங்கள்.

2. பரந்த, எல்;லையற்ற புத்தியுடையவரும், ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்ட இந்த நாடகத்தை மிகத்தெளிவாகப் புரிந்துகொள்பவரும் ஆகுங்கள். இந்த அற்புதமான நாடகத்தில் அனைத்தும் ஏற்கெனவே நிச்சயிக்கப்பட்டுள்ளது. ஆகவே, எக்கேள்வியும் எழ முடியாது. தந்தை உங்களுக்குக் கொடுக்கின்ற வழிகாட்டல்களைத் தொடர்ந்தும் பின்பற்றுங்கள்.

ஆசீர்வாதம்: நீங்கள் மற்றவர்களை ஈடேற்றுபவர்களாகி, வெற்றிநிறைந்தவர் ஆகுவதன் கூடவே, மாயையை வென்றவராகவும் ஆகுவீர்களாக.

தற்சமயம், உங்களுக்கே நன்மை செய்வதிலேயே அதிகளவு நேரம் கழிகிறது. இப்போது, மற்றவர்களை ஈடேற்றுபவர் ஆகுங்கள். மாயையை வென்றவர் ஆகுவதுடன்கூடவே, சகல பொக்கிஷங்களையும் அருள்பவர் ஆகுங்கள். அதாவது, ஒவ்வொரு பொக்கிஷத்தையும் பயன்படுத்துங்கள். ஒத்துழைப்புக் கொடுத்த வண்ணம் உங்களின் சந்தோஷம், சக்திகள், ஞானம் மற்றும் நற்குணங்களின் பொக்கிஷங்களைப் பகிர்வதுடன் அதிகரியுங்கள். நீங்கள் அருள்பவரின் ஸ்திதியை அனுபவம் செய்யும்போது, அதாவது, நீங்கள் மற்றவர்களை ஈடேற்றுபவர் ஆகும்போது, பல பிறவிகளுக்கு உலக இராச்சிய உரிமையை நீங்கள் கோருவீர்கள்.

சுலோகம்: உலக உபகாரி ஆகுவதற்கு, உங்களின் பலவீனங்களுக்கு எல்லா வேளைக்குமாக விடை கொடுங்கள்.

**---ஓம் சாந்தி---**

அவ்யக்த சமிக்கை: இப்போது அன்பெனும் அக்கினியை ஏற்றி, உங்கள் யோகத்தை எரிமலை ஆக்குங்கள்.

மக்கள் பாதுகாப்பாக இருப்பதற்காகவே ஒரு கோட்டை கட்டப்படுகிறது. அரசனுக்காக நீங்கள் சிறியதொரு குகையை உருவாக்க மாட்டீர்கள், ஒரு கோட்டையையே கட்டுவீர்கள். நீங்கள் எல்லோரும் உங்களுக்காகவும் உங்களின் சகபாடிகளுக்காகவும் ஏனைய ஆத்மாக்களுக்காகவும் எரிமலை நினைவெனும் கோட்டையைக் கட்ட வேண்டும். நினைவு சக்தியின் எரிமலை எரியும்போது, ஆத்மாக்கள் எல்லோரும் பாதுகாப்பாக இருப்பதை அனுபவம் செய்வார்கள்.